திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்: என்.வி.நடராசன்

★

கனம். பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தன்னை ஒரு அவதாரம் என எண்ணி உள்ளார் என அவர் சொல்லிலிருந்து நன்கு தெரிகிறது.

அவதாரங்கள்தான் சண்டை செய்து பூமிபாரம் தீர்க்கத்தோன்றுவதாக வேத புராண இதிகாசங்கள் கூறுகின்றது. சில மாதங்களாக நேரு அவர்களின் வாயில் அவதாரங்கள் பேசுவது போன்ற பேச்சுக்கள் ஒலிக்கின்றன.

இராமவதாரம் தோன்றி தென்னுட்டு இராவணுதிகளைக் கொன்று பூமிபாரம் தீர்த்ததாம். கிருஷ்ணுவதாரம் தோன்றி வடநாட்டு துரியோதனுதிகளைக் கொன்று பூமி பாரம் தீர்த்ததாம்!—இதுபோல் பல அவதாரங்கள் தோன்றி பல சண்டைகளைச் செய்து பூமி பாரம் தீர்த்திருக்கின்றன—இன்றைய நேரு அவதாரமும் சண்டைக்கே வழிகோலுவதாக அவர் பேச்சு அமைகின்றது.

அன்று வேத காலம் நடந்தது.

இன்று நீதி காலம் நடக்கின்றது. யாரும் எளிதில் சண்டைகளைச் செய்துவிட முடியாது என்பதை இன்று புரியாமல் பேசலாம். விரைவில் புரிந்துகொள்வார் என்பதில் ஐயமில்லை. நேரு மிக நல்லவர் அவர் 'படிப்பு' அவரை அப்படிச் செய்கிறது.

அரசியல் வேறு—அடிப்படை வேறு!

நாட்டில் நிலவும் அரசியல் வேறு. நாட்டின் அடிப்படை வேறு.

நீடித்த நாகரீக அடிப்படை இலக்கிய இயற்கை வேறு. அவ்வக்கால நிலைக்கேற்ப சார்பு நூற்களின் முறை வேறு. இம்முறையில் பண்டித நேரு அவர்கள் படித்த இந்திய நாட்டு நூற்கள் அவதார மகத்துவத்தைக் கூறும் உபநிசத்துக்களின் நூற்களாகும். அம்மாதிரி நூற்களே வடக்கில் வளம் பெற்றுள்ளன.

வேதகாலத்திற்கு மூந்திய தமிழ் சங்க காலத்து நீதி நூற்கள் வடமொழியில் மொழி பெயர்த்ததாகத் தெரியவில்லை. அதுவும் இந்து மொழி எனப்படும் இந்தி இந்துஸ்தானி குஜராத்தி வங்காளி, மராட்டா முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கவில்லை. திருக்குறள் ஒன்றுமட்டும் சில மொழிகளில் உள்ளன. அதுவும் இந்து சமுதாயமான வடமொழிகளில் இல்லை, வளம் பெற்று மொழி கலை ஆய்வு முதலிய பலவாற்ருனும் இணையற்ற நாடு என்பது வடவர்கள் பெரும்பாலோருக்குத் தெரியாது—தெரிந்தாலும் இயற்கை மொழி உணர்வோடு கண்டுணர வாய்ப்பில்லை.

இந்து மதம்

இந்து மதம் என்ற ஒன்றைத்தான் நேரு அவர்கள் இந்நாட்டின் பூர்வீக மதமென்று நம்பி இருக்கிருர்கள் என்று தெரிகிறது.

இந்து மதம் வேத அடிப்படையில் பல உபநிசத்துக்களின் பிணைப்பில் இணைந்துள்ளது. வடமொழியிலுள்ள உபநிசத்துக்களை இராசாராம் மோகன்ராய்—சர்வில்லியம்—ஜோன்சுபெய்யி—முதலிய பேராசிரியர்கள் ஆங்கிலம்—பாரசீகம்—பிரான்சு—ஜெர்மனி முதலிய பல மொழிகளில் மொழி பெயர்த்திருக்கிருர்கள்.

நேரு அவதாரம்



கி அரங்கசாமி

வெண்டிசு காமன்-போலி-கவுட்-வெபர்-முயர்-கோல்-புருக் முதலிய பேராசிரியர்கள் உபநிசத்துக்களை பல மொழிகளில் மொழி பெயர்த்திருக்கிருர்கள். மூண்டகோபநிசத்தை தாராசோகா என்பவர் பாரசீகத்திலும் பண்டிதர் நோயர் என்பவர் ஐரோப்பா மொழியிலும் மொழி பெயர்த்திருக்கிருர்.

கேனுேபநிசத்தை ராசாராம மோகன்ராய் வங்காளம் இந்தி ஆங்கில மொழியிலும்—தராசுகோ என்பவர் பாரசீக மொழியிலும்—வெண்டிசுகாமன் ஜெர்மனி மொழியிலும்—வெப்கோல் புருக்—போலி-என்பவர்கள் ஐரோப்பிய மொழியிலும் மொழி பெயர்த்து இருக்கிருர்கள்.

கி. பி. 1198ல் சங்கராச்சாரியார் வித்யாரண்யர் — மகீதரர் — சயாயனர் — இரங்கராமானுசர் — ஆஜந்த தீர்த்தர்—அனந்தாநந்தர்-முதலானவர்கள் அந்தந்த இடம்—மதம்—சமயம் ஏற்றுக்கொள்ளும் முறையில் பாஷ்யங்களைத் தொகுத்து வேத கருத்தை நுழைத்திருக்கிருர்கள்.

கி. பி. 1640-ல் இந்து தேசம் முஸ்லிம்கள் வசம் கிடைத்ததில் அக்பர் பாதுசா—என்பவர் இந்து மக்களுக்கு நல்வழி செய்தால் உடன்பாடு அமையும் என்று கருதி பல ஆரிய பண்டிதர்களை வரவழைத்து, வேதவாக்கியங்களையும் உபநிசத் வாக்கியங்களையும் பார்சி முதலிய பல மொழிகளில் எழுதி வெளியிட்டுள்ளார். அன்று பார்சி மொழியே அரசியல் மொழியாக இருந்தமையால் இந்துமத வழக்க பழக்கங்கள் பரவ ஏதுவாயின.

அக்காலத்தில் வாணிபராக வந்த கிரேக்கர் உரோமர்-போர்த்துகீசியர்-பிரான்சியர் ஆகியவர்கள் பாரசீக உபநிசத்துக்களை கொண்டு போய் அவற்றை லத்தீன்-கிரேக்க-பிரான்சு-ஜெர்மனி-ஆங்கிலம் முதலான மொழிகளில் மொழிபெயர்த்து பரவச்செய்துள்ளார்கள்.

இந்நிலையில் இந்துமத நூற்கள் தவிர வேறு நூற்கள் நாட்டின் இயற்கை நூலாக இருப்பதாகவே மக்கள் உணராமல் இருந்தார்கள்.

அன்று தமிழ்நாட்டில் தலைசிறந்த ஆய்வாளர்களும் புலவர்களும் கவிஞர்களும் வாழ்வின் அற நூற்களும் உலகம் மதிக்கத்தக்க நிலையில் இருந்தும் அவற்றை பிறமொழியினர் படித்து உணரத்தக்கவாறு மொழி பெயர்ப்புகள் நடக்கவில்லை. இதனுல் நம் தென்னகத்தின் சிறப்புகளை உணர வாய்ப்பில்லாத வடவர்கள் தன்னைச் சூழ்ந்துள்ள பல வேத நூற்களின் அவதார மகிமையை நம்பியதில் வியப்பில்லை. ஆனுல் அந்தப் போக்கிலேயே நேருவும் நடைபோடுவது விசித்திரமாகவே இருக்கிறது.

இந்தியாவின் தெற்கில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வருகிறது என்ருல் இதுவரை அரசியலில் எதிர்க்கட்சிகளாக பணிபுரியும் கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட் போன்றதொரு கட்சியாக எண்ணியிருப்பாரேயல்லாமல் திராவிடர் என்ருல் பூர்வீக மக்கள்—மண்ணும் நீரும் தோன்றிய காலம் முதல் இந்நாட்டில் வாழும் மரபுடையவர்—இவர்களால்தான் நாகரீகம் உலகிற்கே பரவியது—உலகிற்கே வாழ்க்கை வழியை வகுத்துத்தந்த சித்தர் முனிவர்கள் வாழ்ந்த மரபு என்பது நேருவுக்குத் தெரியுமா?

இடைக்காலத்தில் வந்து நுழைந்ததே வேதபுராண இதிகாசங்கள் என்பதும், அதனுல் உயர்வு தாழ்வு தலைவிதி பாவபுண்ணியம்—தேவ அவதாரம்—இவைகள் தோன்றியது என்பதும்—ஆதிக்கத்திற்காக சண்டையை மூட்டிவிட்டு வெற்றி பெற்றவரை அவதாரம் என்று கூறி ஏமாற்றுகிற வழிக்கு அடிகோலுவதாகவே புராணக் கதைகளும் பிறவும் ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை நேருவால் உணர முடியுமா?

கடவுள் அவதாரங்கள் தங்களால் படைத்த உயிர்களை தாங்களே கொல்லத் துணியுமென்று யாராவது கூறினுல் அதை எந்த அறிவுடையவர்களும் ஒப்புவார்களா? அப்படி பிறர் யாரேனும் கூறியிருப்பாரேயானுலும் அதை பண்டிதர் நேரு ஒப்புவாரா? என்பது ஒரு பொது நோக்கென்று நமக்கே புரிவதால் இதை நேரு உணர முடியுமா—முடியும்!

கழகத்தின் திராவிடநாட்டுப் பிரிவினையைக் கேட்டு வியந்து குழம்பி இப்படியும் ஒரு நாடு உண்டா? அந்நாட்டிற்கு ஒரு மொழியா—அதற்கும் கிளை மொழிகள் உண்டா? அம்மொழிக்கு எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணமுண்டா—எனத் தெரிந்து இத்தமிழின் திரிபே உலக மொழிகள் எனினும் பொருந்துமெனத் தெளிவு பெறும் காலம் வெகு தூரத்திலில்லை.

திராவிடப் பிரிவினை கேட்டால் சண்டை நேரும் உள்நாட்டுக் குழப்பம் வளரும் என்று கூறுவது அவர் சுய அறிவினுல் கூறிய மொழி அல்ல. அவரைப் பயிற்றுவித்த அந்நாட்டுப் பணி அது—அந்நாட்டு நூற்கள் கூறுகிற தருமம் அது. கீதையில் கண்ணன் காட்டிய வழியும் அதுவே. அருச்சுனு, நீ என் பொருட்டு இவர்களைக் கொல்லு. அதனுல் வரும் பாவம் புண்ணியத்தை பொருட்படுத்தாதே—அதற்குக் காரணம் நானுயிருக்கிறேன்—இதைப்படித்த நேரு பிரான், திருவள்ளுவர் கூறிய

> பகைநட்பாக் கொண்டொழுகும் [பண்புடையாளன்
> தகைமைக்கண் தங்கிற் றுலகு.

என்னும் திருக்குறள் கருத்தைப் படித்திருப்பாரா? அவர் முடிவை இன்னும் பார்ப்போம்.

தீந்தமிழும் தி. மு. கழகமும்!

தமிழின் பெருமையை, தமிழரின் உரிமையை நிலைநாட்டிட அயராது பணியாற்றி வரும் இயக்கம் தி. மு. கழகம்தான்!

[கோவலூர் வாணன் எம்.ஏ]

அறிஞர் அண்ணு

''தன்னேரிலாத் தமிழினம்'' கல் தோன்றி மண் தோன்ரு காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழினம்'' என்றெல்லாம் புகழப்பெற்ற தமிழினத்தின் பழைய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் எவ்வளவோ வேற்றுமைகள் உண்டு. குறிப்பாக சங்ககாலத்திற்கும் இடைக்காலத்திற்குமே அதிக வேற்றுமைகள் உண்டு.

மூவேந்தர் காலத்தில் நிலப்பரப்பால் வேற்றுமை யிருந்ததே தவிர மொழியால், இனத்தால் ஆளும் முறையால் வேற்றுமை யில்லை. பொதுவாக தமிழ் மன்னரை இழிவாகப் பேசி கனகவிசயரைக் கழுத்தொடியச் செய்தது சேரனின் மொழிப்பற்றும், இனப்பற்றுமே யாகும். அவன் ''எனக்கென்ன? என்னையா இழிவாகப் பேசினர்?'' என்று பேசாமலிருந்திருக்கலாம், ஆனல் அவன் இனப்பற்று, யாரை

மறைமலையடிகளார்

சொன்னாலென்ன? தமிழினத்தைத் தானே இழித்துக் கூறினர் என்று வீறு பெற்றெழச் செய்தது.

இத்தகையதொரு இனப்பற்றும் மொழிப்பற்றும் இடைக்காலத்திலே குறைய ஆரம்பித்து இக்காலத்திலே சிலரிடம் இல்லாமலே ஆகிவிட்டன. இருந்திருந்தால் தமிழரை ''நான்சென்ஸ்' (Nonsense) என்று கூறியது தவறு என்று நேருவைக் கண்டித்த தி. மு. க. வை நீங்கள் யார் கண்டிக்க? எங்களைத் தானே நேரு ஏசினர் என்று திரு. ம. பொ. சிவஞானம் கேட்பாரா?

இடைக்காலத்திலிருந்து இனப்பற்றும் மொழிப்பற்றும் குறைந்தற்கு காரணம் சாதி, சமய வேறுபாடுகளேயாகும். அவற்ருேடு இக்காலத்தே கட்சி வேறுபாடும் காரணம் எனச் சொல்லலாம்.

சைவரும் வைணவரும் சமயத்தால் வேறுபட்டிருந்தாலும் ஒரே இனத்தவர் என்பதை மறந்தனர். வைணவத்தை எதிர்ப்பதாக எண்ணிய சைவரும், சைவத்தை எதிர்ப்பதாக எண்ணிய வைணவரும் தாங்கள்தாம் சொந்த இனத்தையும் மொழியையுமே எதிர்க்கிருேம் பழிக்கிருேம் என்பதை மறந்தனர்.

அதாவது மொழி, இனம் இவற்றைக் காட்டிலும் சமயத்திற்கே அதிக முதன்மை கொடுத்தனர். இதனல் வேற்றுமைகள் தாம் வளர்ந்தன. இந்நிலையில் அயல் நாட்டார் எப்படி மதிப்பர்?

மொழிக்கும் இனத்திற்கும் எவர் தொண்டு செய்தாலும் அதில் நன்மை இருப்பின் போற்றவேண்டும், ஆதரவு தரவேண்டும் என்ற நல்லெண்ணம் சமய வேறுபாட்டினல் குறைந்தது. இப்படித் தங்கள் இனத்தின் பாலும், மொழியின் பாலும் பற்று குறைந்த மக்களால் தங்கள் மொழியின்—இனத்தின்—சிறப்பை, உயர்வை, தொன்மையை அறிய ஆவலும் அதை உலகெங்கும் பரப்பி உயர்த்தவேண்டும் என்ற எண்ணமும் எழுதல் அரிது.

அதனுற்ருன் தமிழன், இலக்கண அமைப்பையும் மொழியின் தொன்மையையும் உலகிற்கு அறிவிக்க ஒரு 'கால்டு வெல்லும்' திருக்குறள் போன்ற நூல்களின் சிறப்பை உலகிற்கு உணர்த்த ஒரு 'போப்'பும், பெஸ்கியும் தேவைப்பட்டார்கள்.

மேலும் தமிழ் இலக்கியங்களைத் தேடி எடுத்து அச்சிட, உ. வே. சாமிநாதையர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் போன்றவர்கள் தான் முன்வந்தார்களே யன்றி தமிழர்கள் யாருக்கும் அவ்வுணர்வு எளிதில் தோன்றவில்லை. இதை நினைக்கும்போது தாமரைப் பூத்திருக்கும் குளத்திலேயே தோன்றி உயிர் வாழும் தவளைக்கும் அந்த தாமரையின் அழகும் அருமையும், அதிலிருக்கும் தேனின் சுவையும் தெரிவதில்லை. ஆனல் எங்கோ சோலை முதலானவற்றில் வாழுகின்ற வண்டோ இத்தாமரை மலரைத் தேடிவந்து தேனை உண்டு மகிழ்கிறது என்ற கருத்தமைந்த சிந்தாமணிப் பாடல் நினைவுக்கு வருகிறது.

வேற்றுமொழி, இன ஆதிக்கம் அதிகமாகி, தமிழ் இலக்கிய இலக்கணங்கள் வடமொழியின் வழியொற்றி வந்தவையே என்ற தவருன கொள்கை பரவி தமிழ், வடமொழியின்றி தனித்தியங்க முடியுமா? என்ற கேள்வியையும் வேண்டுமென்றே மாற்ருர் பரப்பிவிட்ட நேரத்தில், மனேன்மணியம் சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், திரு வி. க. போன்ற பேரறிஞர்கள் அவர்கள் கூற்றுக்கு எதிரடி கொடுத்தனர். மறைமலையடிகள் துணிந்து தனித்தமிழ் இயக்கம் கண்டார். ஆனுலும் இவர்களின் முயற்சி எல்லாம் முழு வெற்றி பெறவில்லை. தமிழின் மறு மலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இவர்கள் தாம் என்ருலும் இவர்களது முயற்சி இவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு பயன் தரவில்லை. வேறு மொழி ஆதிக்கம் சிறிது ஆட்டம் கண்டது என்ருலும் வையாபுரி போன்ருர் செய்த ''தொண்டினல்'' மக்களின் இதயத்தில் உணர்வும் விழிப்பும் தோன்றவில்லை. ஆனல் முதன் முதலில் சுந்தரம்பிள்ளை போன்ருரின் கொள்கையை அடியொற்றி தமிழ் மொழி, தமிழ் இனம் இவற்றின் வளர்ச்சியே தங்களது அடிப்படைக் கொள்கை என்று முழக்கமிட்டு வீறு பெற்றெழுந்தவர்கள் அன்றைய திராவிட இயக்கத்திலிருந்த இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தவரே. தமிழ் இன மொழியின் மறுமலர்ச்சியைத் தங்கள் கட்சியின் உயிர்நாடியாகவும் அடிப்படை லட்சியமாகவும் ஆக்கிக்கொண்ட

[3-ம் பக்கம் பார்க்க]



தமிழ்ப்பெரியார் திரு. வி. க

2-ம் பக்கத் தொடர்ச்சி……………

ஒரே கட்சி தி. மு. க. என்ருல் அது மிகையாகாது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை கூட தூய தமிழ் பேசுவோரைக் கண்டால் கழகத்தவரோ என்று அஞ்சி நடுங்கினர் காங்கிரசார். கழகம் என்ற சொல்லே தி. மு. க. வைத்தான் குறிப்பதாகக் கொண்டனர். கழகம், வணக்கம் போன்ற சிறந்த தமிழ்ச் சொற்களை பரவலாக வழக்கிற்கு கொண்டுவந்தவர்களே தி. மு. கழகத்தினர்தான்!

அதுமட்டுமன்று தூய தமிழ்ப் பெயருடையவரையும் தமிழ்ப் பேசுவோரையும் கழகத்தவர் என்று சந்தேகித்தவர்கள் தமிழ் ஆசிரியர்கள் அத்தனை பேரும் கழகத்தவரே என்று ஓலமிட்டதை எவரும் இதற்குள் மறந்திருக்கமாட்டார்கள் அந்த அளவுக்கு தமிழ் தழைக்குமிடமெல்லாம் தி. மு. க, என்றனர். அதாவது தி. மு. க.வின் மொழிப்பற்று தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முக்கியப் பகுதியினரான படித்த மக்களின் மனதைத்தொட்டது. தி. மு. க.வின் சமுதாய பொருளாதார கொள்கைகள் தமிழ்ச் சமுதாயத்தின் உயிர்நாடியான ஏழை-நடுத்தரப் பகுதியினரைக் கவர்ந்தது. குறிப்பாக தமிழ்ப்பற்று, இனப்பற்று இவற்றில் அக்கறை கொள்ளாத கட்சி இனி தமிழகத்தில் உயிர் வாழ முடியாது என்றதொரு சூழ்நிலையை உருவாக்கியது தி. மு. க. ஒன்றுதான்!

தமிழ்ப்பற்று இல்லாத கட்சி இனி தழைக்க முடியாது என்ற நிலை உணர்ந்த தமிழக கட்சிகள் ஒவ்வொன்றும் தமிழ்ப்பற்று உள்ளவைகள்போல் நடிக்க முயன்றன.

ஆனுலும் தமிழ்த்துறையில் இதுவரையில் தி. மு. க. பெற்றுள்ள செல்வாக்கைப்போல் மற்றெந்த கட்சியும் பெருததற்குக் காரணம் அவைகளுக்கு தமிழ்மொழி, கலை, பண்பாடு இவற்றில் உண்மையானபற்று யில்லாமையேயாகும்.

உலகமே ஒப்புக் கொள்ளும் உயர்ந்த கொள்கையைப் பெற்றிருந்தும் இந்த ஒரு காரணத்திற்காகவே கம்யூனிஸ்டுகள் தமிழகத்தில் செல்வாக்கு பெறமுடியவில்லை. அது மட்டுமா? தமிழ்த் தொண்டு செய்வதாலேயே கழகம் வளருகிறது என்று உணர்ந்த சிலர் தமிழின் பெயராலேயே கட்சிகள் ஆரம்பித்தனர்.

தி. மு. க —தி. க. விலிருந்து பிரிவதற்கு முன்பே தோன்றிய தமிழரசுக் கழகம் இன்ருே நாளையோ, இன்னும் கொஞ்ச நேரத்திலோ என்று உயிரைக் கையால் பிடித்து ஊசலாடிக் கொண்டிருப்பதற்குக் காரணம் உண்மையான இனப்பற்றும் மொழிப்பற்றும் இல்லாமையேயாகும். சிலப்பதிகாரத்தின் பெயரால் மாநாடுகளும் எல்லைப் போராட்டங்கள் என்ற நாடகங்களும் நடத்திப்பார்த்தும் தலைவர் தனிமரமாக நிற்க செயலாளர் செல்லட்டுமா இருக்கட்டுமா என்று சிந்தனையிலிருக்க "அட்ரஸ்" இல்லாத கட்சியாகிவிட்டது.

கழகத்தின் இடைவிடா உழைப்பாலும், பிரச்சாரத்தாலும் தமிழ் இன உணர்வு பெற்ற கடைசித் தமிழர் திருவாளர் ஆதித்தனுராகத்தான் இருக்கமுடியும்! இல்லையென்ருல் இத்தனை ஆண்டுகள் கழித்து, தமிழினத்தில் ஒரு மறுமலர்ச்சியும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்ட பிறகு நாம்-தமிழர் என்ற கட்சி ஆரம்பிப்பாரா? இதற்கு எவ்வளவோ விளம்பரம் கொடுத்தும் கவர்ச்சிப் படங்களுடன் கொள்கைப் பிரச்சாரங்கள் செய்தும் ஒன்றும் எடுபடக் காணேம்!

தமிழகத்தின் பேச்சு மேடைகளையும் கலை அரங்கங்களையும் கைப்பற்றி மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்ற கழகம் 'ஏகஇந்திய' கொள்கையுடைய தமிழக ஆட்சியினரை சங்கடத்தில் ஆழ்த்திவிட்டது, இந்திய அரசியல் கொள்கைப்படி இந்திக்குத்தான் முதலிடம் தரவேண்டும். ஆனல் கழகம் தமிழகத்தில் ஏற்படுத்திவிட்ட மொழியுணர்வும், இன உணர்வும் இந்த ஏகஇந்தியக் கொள்கைக்கு வேட்டு வைத்தன. இதனுல் தமிழக ஆட்சியினருக்கு இரண்டு பக்கமும் இடி ஏற்பட்டது.

இந்தியை எதிர்த்தால் தங்களது எசமானர்களின் சீற்றத்திற்கு ஆளாகவேண்டும், இதனுல் பதவிக்கே ஆபத்து. இந்தியை ஆதரித்தால் தாயக மக்களின் எதிர்ப்பு! இப்படி இரண்டுக்கும் பதில்சொல்ல முடியாதவர்கள் இதுவரை மொழி பற்றிய எந்தவிதமான திட்டவட்டமான முடிவையும் மக்களின் முன் வைக்கவில்லை.

மீனுக்கு தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்குபோல் தில்லி எசமானர்கள் விரட்டும்போது இந்தியை ஏற்றுக்கொண்டோம் எப்படியும் அதைபரப்பிவிடுகிருேம் என்று அடக்கத்தோடு கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் இங்கே வந்து இந்தியை புகுத்தவிடமாட்டோம் என்று வீண் சவடால் விடுவதுமாக இருக்கிருர்கள்.

இதற்கிடையில் இந்த தொடைநடுங்கிகள் தமிழினத் துரோகிகள் சிலரைப் பிடித்து தி. மு. க.வுக்கு தமிழ்ப்பற்று இல்லை, அவர்கள் திராவிடக் கூட்டாட்சியில் தமிழை நசுக்கப் பார்க்கிருர்கள் என்று வாய்க்கூசாது பேச வைத்திருக்கிருர்கள். திராவிடக் கூட்டாட்சியில் தமிழகத்தின் நிலை எவ்வாறு இருக்கும் என்று திட்டவட்டமாக அறிவித்த பின்னரும் தங்கள் இனத்துரோக புத்தியை மறைப்பதற்காக ஊர்தோறும் உலாவும் இவர்களை வருங்காலத் தமிழகம் மன்னிக்கவே மன்னிக்காது.

இவ்வாறு ஒருபுறம், உண்மையாக தமிழ்த் தொண்டு செய்யும் ஆயிரமாயிரம் இளைஞர்களின் கொள்கைகளைத் திரித்துக் கூறியும் மொழிப்பற்று சிறிதும் இல்லாது ஏக இந்தியக் கொள்கைக்கு-இந்தி ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாகி கிடக்கும் ஒருவரை பச்சைத் தமிழன் என்று வெட்கமில்லாமல் ஊர்தோறும் கட்டியம் கூறிவருகிருர் ஓர் அனுபவம் வாய்ந்த அரசியல் பெரியவர் என்ருல் இதை வடிகட்டிய 'அரசியல் பேரம்' என்று சொல்வதைவிட வேறு எப்படி அழைப்பது ?

தமிழக மேடைகளில் தூய தமிழ் முழங்கவைத்தது கழகம். எழுத்து நடையில் ஒரு தனி நடை கண்டது. 'ஆனந்த விகடன்' போன்ற பத்தாம்பசலிப் பத்திரிகைகளும் தங்கள் நடையை மாற்றிக்கொள்ளும் அளவுக்கு ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. தமிழ் இலக்கியங்களின் சுவையையும், தமிழ்ப் பண்பாட்டின் பெருமையையும் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரப்பி மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது—ஏற்படுத்தி வருவது கழகம் தான்.

தமிழ் இனத்திற்காக நல்லதைச் செய்பவர் யாராயிருந்தாலும், எந்தக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் போற்றும் மனப்பாண்மை உணரவேண்டும், கட்சி வேறுபாடு காரணமாக உண்மையை மறைப்பது அறமாகாது. வேண்டுமானுல் இன்றைக்கு தங்களுக்கிருக்கிற பணம், படை, பதவி இவற்றின் பலத்தைக்கொண்டு உண்மைக்குத் திரை போடலாம். ஆனுல் என்ருவது ஒருநாள் திரை கிழிந்தே தீரும்.

நேற்றுவரை தி. மு. க.வில் தொண்டு செய்துகொண்டிருந்த சிலரைப் பிடித்து கழகத்திற்கு எதிராக பிரசாரம் செய்ய விட்டிருக்கின்றனர். இது கடைத்தரமான அரசியல் தந்திரம் என்பதை காங்கிரசார் அறியாவிட்டாலும் நாடு அறிந்துகொண்டது, அந்தோ பரிதாபம்! முளைத்து மூன்று மாதங்களுக்குள் ஆடிப்பாடி, ஆர்ப்பரித்து, கொட்டி முழக்கி கொக்கரித்து, முக்கி முணறி மூக்கறுந்து மூலையில் உட்கார்ந்துவிட்டது புதுக்கட்சி?

"தங்களின் சொந்த ஆசாபாசங்களுக்காக தமிழ் மக்களையும் தமிழகத்தையும் காட்டிக் கொடுக்கும் பேர்வழிகள் போனுல் போகட்டும் போடா" என்று லட்சக்கணக்கான தமிழர் படை ஆர்த்தெழுந்து கிளம்பிவிட்டது தொடர்ந்து தமிழினத்திற்கு தொண்டுசெய்ய. அந்த வரலாறு கண்ட மறவர்படைக்கு ஆக்கமும் ஊக்கமும் தேடித்தருவது தமிழ்ப் பெருங்குடி மக்களின் தலையாய கடமையாகும்.

○

தென்னவனுக்குச் சோதனை !

——(0)——

-[வ. இசைப்பித்தன்]-

——00——

தென்னுட்டுத் தன்னுட்சி காண மக்கள்
தந்திட்ட வாக்குகளை எண்ணிப் பாரீர் !
பொன்னுட்டின் வாழ்வுதனைப் போற்றத் துடிக்கும்
பெருமக்கள் உள்ளமதை எண்ணிப்பாரீர் !!
அண்ணுசொல் ஏற்றிடவே இலட்சம் இலட்சம்
இளவல்கள் பெரும்படையை எண்ணிப் பாரீர் !
"இந்நாடா!" எங்குண்டு? என்றே லமிடும்
எத்தர்காள்! சற்றெண்ணிப் பாரீர்! பாரீர் !

திராவிடத்தால் ஒன்றுசேர்ந்த பண்டைத் தமிழர்
திருவெல்லாம் பிறர்கையில் பறிகொடுத்து
பெருநிற்கும். திராவிடத்தார் வாழ்வைக் காண
போர்க்கொடியும் உயர்த்திவிட்டோம் "அண்ணு நாட்டில்"
"புருவொத்த பண்டிதரார்" புகழைக் காக்க
பொன்னுட்டைத் தந்திடுவீர் இன்றே எமக்கு.
வராதொத்து என்றிட்டால் வீனே எங்கள்
வீரத்தைச் சோதிக்கும் வேலை வேண்டாம் !

சொந்தநாட்டில் குள்ளநரி வேலை செய்யும்
'துணிவில்லாக் கோழைகளே' சற்று நின்று
இந்தநாட்டின் தளையறுக்க உங்கள் வாழ்வை
எம்படையில் சேர்த்திட்டால் உய்வு உய்வு
'பண்டிதரும்' சவால்தன்னை உரத்த குரலில்
பாராளு மன்றத்தில் கூவி விட்டார்
தென்னவனே! உன்றனுக்கு அழைப்பும் அண்ணு
தந்திடுவார் வீரம்கொள் திறமை காட்டு !

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

——|——

வணக்கம். மார்ச் முடிய உள்ள பட்டியல் விவரம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான தொகை முழுவதும் உடன் தவருமல் அனுப்பிவைத்தால்தான் மேற்கொண்டு பத்திரிகை அனுப்பிவைக்க இயலும் என்பதை தெரிவித்துக்கொள்கிருேம்.

— நிர்வாகி: திராவிடன்

திராவிடன்

எதையுந் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

சென்னை | 7—4—62 | சனிக்கிழமை

அரசியல் பேரம்?

——[(*0*)]——

இந்தியத் துணைக் கண்டத்தின் முக்கிய மாநிலங்களில் வடவர் ஏகாதிபத்ய எதிர்ப்பு உணர்ச்சி வேகமாகப் பரவிவருவதை எவரும் மறுப்பதற்கில்லை. குறிப்பாகத் தமிழ்நாட்டில் அந்த விடுதலை உணர்ச்சி கட்டுக்கோப்பான அடிப்படையில் வளர்ந்து வருகிறது. எனினும் ஆளும் வர்க்கத்தினர் அதற்கான விவரங்களையறிந்து அந்த உரிமையை வழங்கி அதன் அடிப்படையில் இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமையை வளர்க்க முனையவில்லை.

அதற்கு மாருக, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பேசுவதே, தங்களின் தேசிய பதிவிரதா தர்மத்துக்குக் கேடு விளைவிப்பதாகும் என்பதாகப் பசப்பி, தென்னகத்திலுள்ள தேசியத் திருமேணிகள் நடித்துவருகின்றனர்!

'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற இலட்சிய முழக்கமும் உணர்வும் நீண்டபல காலமாக அரசியலாரின் உருட்டல் மிரட்டல், அடக்குமுறைகள் ஆகியவைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்துக்கொண்டு படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறதென்பதை விருப்பு வெறுப்பின்றி யோசித்தால், தனிநாட்டு உரிமை கேட்பதில் உள்ள தூய்மை நன்கு விளங்கும்.

ஆனுல், எப்போதுமே அதிகார போதையும் இறுமாப்பும் தங்களின் கண்களை அடைத்துவிடுவதால் விவேகத்தை இழந்து வீம்பு பேசுவதில் முனைவதும் இறுதியாக குனிந்துகொடுப்பதும் ஏகாதிபத்ய கும்பலின் பரம்பரை பழக்கமாகிவிட்டது.

இத்தகு பிற்போக்கிற்கு நாங்கள் மட்டும் விலக்கல்ல என்று விளம்பரப்படுத்திக்கொண்டு வருகிறது இந்தியப் பேரரசு!

அதிலும் இத்தேர்தலில் கழகம் பெற்ற வெற்றியினைக் கண்டதும் இந்தியப் பிரதமர் நேருவிலிருந்து அவரது எடுபிடிகள்வரை கழகத்தின் அடிப்படைக் கொள்கையை வன்மையாகக் கண்டித்துப் பேசி வருகின்றனர்! போரே முண்டாலும் திராவிடநாடு கோரிக்கைக்கு இணங்கமாட்டேன் என்று நேரு பண்டிதரே சண்டைக்கிழுக்கும் சேஷ்டைகளில் இறங்குகிருரென்ருல் சாதாரண காங்கிரஸ்காரர்கள் எவ்வாறு பேசுவார்கள் என்பதைப்பற்றி நாம் விவரிக்கவேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறோம்.

தேர்தலில் கழகம் பெற்ற வெற்றி—திராவிடநாட்டுக் கோரிக்கையை ஆதரித்துக்கொடுத்த வாக்குகள் அல்ல என்று கூறவந்த அமைச்சர்களும் அவர்களது பரிவாரங்களும் எவ்வளவு முரண்பட்ட—அறிவுக்கும் புறம்பான பேச்சுக்களைப் பேசிவருகிருர்கள் என்பதை ஆராய்ந்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எந்த அளவுக்கு கதிகலங்க வைத்திருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

இவ்வித பேச்சுக்களால் அல்லது அதிகார வெறியால் திராவிட நாட்டுக் கோரிக்கையைச் சாய்த்துவிடமுடியாது என்று எண்ணி இப்போது புதிய தந்திரத்தில் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது.

தென்னுட்டைச் சார்ந்தவர்களுக்கு இந்தியப் பேரரசில் பெரும் பதவிகளைக் கொடுத்துவிட்டால் தென்னக மக்களின் தனிஉரிமைக் கிளர்ச்சி சிறுகச்சிறுக குறைந்துவிடும் என்பது வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் விசித்திரக் கண்டுபிடிப்பாக யிருக்கிறதென்று அறிகிறோம்.

இந்தியக் குடியரசின் தலைவர் பதவியை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்குக் கொடுக்கப்போவதாகவும் அதுபோலவே தமிழ் மாநிலத்தின் முன்னுள் நிதி அமைச்சர் சுப்ரமண்யம் போன்ற இரண்டொருவருக்கு இந்தியப் பேரரசில் அமைச்சர் பதவிகளும் கொடுக்கப்போவதாகவும் இதனுல் வடநாடு—தென்னுடு என்ற பேதா பேதத்திற்கே இடமில்லாது போகுமென்றும் திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

சென்ற திங்கள் பெங்களூரில் அறிஞர் அண்ணு அவர்களிடம் 'இந்து' நிருபர் பேட்டி கண்டபோது, இந்திய சர்க்காரில் தென்னுட்டுக்காரர்களுக்கு பெரும் பதவி கொடுத்துவிட்டால் வடநாடு தென்னுடு என்ற வேறுபாட்டுக்கு இடமில்லையல்லவா என்று கேட்டிருக்கிருர்!

அதற்கு அண்ணு அவர்கள் சொன்ன பதிலில், "தென்னகம் தனது அரசியல் உரிமையையும் மதிப்பையும் இழந்துவிட்டு இங்குள்ள இரண்டொருவர் பெரும் பதவி பெறுவதால் தென்னகத்திற்கும் பெருமையில்லை, தென்னக மக்களுக்கும் நல்வாழ்வு ஏற்படாது என்பதுமட்டுமல்லாமல் திராவிட நாட்டுத் தனி உரிமை கோரிக்கையானது இங்குள்ளவர்களுக்கு டெல்லி மூலவர்கள் அளிக்கும் ஒரு சில பதவிகளைக் கண்டு மயங்கி கைநழுவவிடும் பிரச்சினையுமல்ல" என்று திட்டவட்டமாக குறிப்பிட்டிருந்தார்கள்.

டெல்லி மூலவர்கள் இப்போது செய்துவரும் 'நகாஸ்' வேலைக்கு அறிஞர் அண்ணு அவர்களின் பதிலையே மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

பரங்கியர் ஏகாதிபத்யமும் அந்நாளில் நாடெங்குமுள்ள ஒரு சிலருக்கு மிகப்பெரும் பதவிகளைத் தந்தது. ஆனுல் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மக்கள்—குறிப்பாக காங்கிரசார் தங்களது விடுதலைக் கிளர்ச்சியை கைவிட்டார்களில்லை. அதுமட்டுமல்ல காந்தியாரிடம் நன்மதிப்புப் பெற்றிருந்த சாப்ரு—ஜெயகர் போன்றவர்கள், அன்றைய ஆளும் வர்க்கத்திற்கும், காங்கிரசுக்கும் இடையே எவ்வளவோ சமாதானம் செய்தும் தனது கோரிக்கையைக் காங்கிரஸ் நழுவவிடவில்லை.

அதுபோலவேதான்... ஏன் இன்னும் அதைவிட உறுதிப்பாடாகவே பனியா ஏகாதிபத்தியத்திலிருந்து தென்னகம் விடுபடவேண்டுமென்ற தூய்மையான பணியில் கழகம் ஈடுபாடு கொண்டிருக்கிறது. இதன் தத்துவத்தைச் சரிவர உணர்ந்து நடப்பதற்கு பதிலாக ஏதோ இரண்டொரு பதவித் துண்டுகளை வீசி எறிந்தால் திராவிட நாட்டுத் தனி உரிமைக்கிளர்ச்சி ஓய்ந்துவிடும் என்று எண்ணுவது பேதமையாகும்.

காங்கிரசைப்போல கழகம் வலுப்பெற்றதாக வசதியுடையதாக இல்லாமலிருக்கலாம். நாம அதை மனமார ஒப்புக்கொள்கிறோம். ஆனுல் கழகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள லட்சக்கணக்கான தோழர்கள் திராவிட நாட்டுத் தனி உரிமையைப் பெறுவதை தங்களது உயிரினும் மதிப்புவாய்ந்ததாக மனமார எண்ணி தங்களைக் கழகப் பணிக்கு ஒப்படைத்துக் கொண்டவர்களாவர். கழகத்தை நடத்திச்செல்லும் அறிஞர் அண்ணு அவர்கள் பதவிஆசாபாசங்களை உதறித்தள்ளியவர் என்பதை அவரது பொதுவாழ்வை நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்க்கும் மாற்ருரும் ஒப்புக்கொள்வர்.

ஆகவே இன்றைய இந்திய அரசியல் அமைப்பில், தென்னகத்தைச் சார்ந்தவர்கள், ஜனுதிபதி பதவியோ அமைச்சர்கள் பதவியோ பெறுவதைவிட சுதந்திரத் திராவிடநாட்டின் குடிமக்களாக வாழ்வதையே பெரும் பேருகக் கருதுகிருர்கள்.

இந்த உண்மையை ஆளும் வர்க்கம் இப்போது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் காலம் அவர்களுக்கு இந்த பாடத்தைத்தான் கற்பிக்கப் போகிறது.

ஆதலின் பதவித்துண்டுகளை வீசி எறிந்து உரிமைக் கிளர்ச்சியை அடக்கிவிடலாம் என்று இந்தியப் பேரரசு எண்ணுமேயானுல் அதைவிட விவேகமற்ற செயல் வேறிருக்கமுடியாது என்று சுட்டிக்காட்டி அறிவுறுத்துகிறோம்.

என். வி. நடராசன்

அடித்து விரட்டுங்கள்!

——(0)——

"திராவிடநாட்டைப் பெறுவோம் என்று கூறுகிருர்கள். நாட்டைப் பிரிப்பதற்காக நாம் சுதந்திரம் வாங்கவில்லை......பிரிவினை எண்ணம் கொண்டவர்களை பக்கத்தில் வரவிடாதீர்கள். விஷப்பாம்பை அடித்து விரட்டுவதுபோல் அடித்துவிரட்டுங்கள்"

—என்று தமிழ் மாநில முதலமைச்சர் காமராசர் சென்னை பெரம்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் 3—4—62 அன்று பேசியிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

4—3—62 அன்று நடைபெற்ற கடற்கரைக் கூட்டத்தில் "அமைச்சர்கள் தேர்தல் சமயத்தில் தங்களின் அதிகாரத்தைத் தவருன வழிகளில் செலுத்த முற்பட்டால் அதைத் தீவிரமாக எதிர்க்க வேண்டும் என்று என.வி.என். சொல்லும்போது உணர்ச்சி வயப்பட்டு பேசிய பேச்சை உடனே அறிஞர் அண்ணு அவர்களின் அறிவுரைக்கேற்ப திரும்பப்பெற்று வருத்தமும் தெரிவித்தார்.

என்ருலும் அதற்குப்பிறகு காங்கிரஸ் கூடாரத்தினரும் மற்றும் சில கட்சிகளும் இந்து, மித்திரன், ஆனந்தவிகடன் போன்ற தேசிய ஏடுகளும் தி. மு. கழகத்தின் பொறுப்பு வாய்ந்த ஒருவர் இப்படிப் பேசலாமாயென்று கண்டனக் கணைகளை ஏவின. உபதேசமும் செய்து ஓய்ந்தனர்.

ஆனுல், நாடாளும் முதலமைச்சர் இன்று கடைந்தெடுத்த பலாத்காரத்திற்கு மக்களைத் தூண்டிவிட்டிருக்கிருர். அந்த மேடையில் அவரது தவறை எடுத்துக்கூறும் அளவுக்கு தகுதிபடைத்தவர்கள் யாரும் இல்லைப்போலிருக்கிறது.

என்ருலும் 'இந்து' 'மித்திரன்' போன்ற பத்திரிகைகள் இதுகுறித்து அறவழியில் நின்று கடமையாற்றப்போகிறதா அல்லது ஆளும் கட்சிக்கு ஒரு நீதி மாற்ருருக்கு வேறு நீதி என்ற பத்தாம் பசலித்தனத்துக்கு மேலும் அடிமையாகப் போகிறதா—பொறுத்திருந்து பார்ப்போம்.

அடுத்த வாரம்

- அறிஞர் அண்ணுவின் டெல்லிப்பயணம் — சிறப்புக் கட்டுரை.
- பம்பாயில் எம். எஸ். சிவசாமியின் முழக்கம்!
- சேரன்தம்பி அளிக்கும் கருத்துக் குவியல்!

ஆகியவைகளுடன்

- அல்ஜீரிய மக்களின் எழுச்சி குறித்து என். வி. என். சோமு தரும் வரலாற்றுச் சான்றுகள்!

முதலியன 14-4-62-ம் நாள் திராவிடன் இதழில் இடம்பெறும்.

சட்டமன்ற அவைத் தலைவருக்கு கழகத் தலைவர்களின் பாராட்டுரை

தமிழக சட்டமன்றத்தின் அவைத் தலைவராகவும், துணை அவைத் தலைவராகவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. செல்லபாண்டியன், திரு பார்த்தசாரதி ஆகியோரைப் பாராட்டி சட்டமன்ற தி. மு. க. சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன், சட்டமன்ற தி. மு. க. துணைத்தலைவர் கலைஞர் கருணாநிதி செயலாளர் கே. எ. மதியழகன் பி. ஏ., பொருளாளர் முனு ஆதி. திரு. சண்முகம் ஆகியோர் பேசினர்.

•

நாவலர் நெடுஞ்செழியன்

சட்டமன்றத் தலைவராகவும், துணைத்தலைவராகவும் நீங்கள் இருவரும் ஒரு மனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட பாங்கு கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். என் சார்பிலும். நான் சார்ந்த சட்டசபை தி. மு. க. சார்பிலும் வாழ்த்துதலையும், பாராட்டுதலையும், போற்றுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளை வலிவுடனும், பொலிவுடனும் உறுதியுடனும் நடத்தும் தகுதியும், திறமையும், அறிவும், ஆற்றலும் உணர்வும், உழைப்பும் உங்களுக்கு உண்டு என்று கேள்விப்பட்டு பூரிப்பும், பெருமையும் கொண்டுள்ளேன். தமிழக சட்டமன்றம் பேரும் புகழும் பெற்று நிலை பெற்றுள்ளது. வழக்கறிஞராக அனுபவம் பெற்றுள்ள தாங்கள் சட்டமன்ற தலைவராக வந்துள்ள பிறகு இந்த மரபுகள் வளர்வதோடு ஓங்கு புகழ் எய்தும் வாய்ப்பு ஏற்படுகிறது.

சட்டமன்ற தலைவர் பதவி கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட பதவி. அவைத்தலைவராக இருப்பவர் நீதிபதி போல நீதி வழங்குபவராகவும், உரிமையைப் பாதுகாக்கிற பாதுகாவலராகவும் இருப்பவர். இந்த பதவி அன்பு செலுத்துகிற தாயைப் போலவும், அறிவு புகட்டுகிற தந்தையைப் போலவும், வழி காட்டுகிற ஆசிரியரைப் போலவும் உள்ளதொரு பெரிய பதவி. இந்த பதவிக்கு ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினரை மதித்துகலந்து பேசி தேர்வு நடத்தும் முறையைக் கையாண்டால், போட்டியின்றி தேர்ந்து எடுக்கிற இந்த நல்ல மரபு மேலும் வளர வழி ஏற்படும்.

சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமர்ந்து ஒரு பக்கமும் சாயாமல், நீதி வழங்கவேண்டும். வழங்குவீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய கடமையை ஆற்றுவதில் நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக நின்று ஒத்துழைப்பையும், அன்பையும் செலுத்துவோம் என்று உறுதி கூறிக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியாக இருப்பதால் எல்லாவற்றையும் எதிர்ப்போம் என்று எண்ணிவிட வேண்டாம். ஆட்சியில் நீதி குறையும்போது, நேர்மை குறையும்போது, குற்றம் நிகழும்போது அவற்றைப்போக்க நீக்க, நாட்டின் நலன்கருதி மக்கள் உரிமையைக் காக்க உறுதியோடு பாடுபடுவோம். அதே சமயத்தில் மக்களுக்கு வயிறார உண்ண உணவும், மானங்காக்க உடுக்க உடையும், இளைப்பாற வீடும், நகர இன்பமும் கிடைக்க ஆளும் கட்சி எடுக்கும் நல்ல திட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும், உறுதுணையாக இருந்து ஆதரவு காட்டுவோம்; அன்பு செலுத்துவோம். உங்கள் தூய உள்ளம் வாழ்க; தொண்டு வெல்க, தமிழக சட்டமன்ற புகழ் ஓங்குக என்று போற்றுகிறேன், பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்."

•

கலைஞர் கருணாநிதி

புனிதம் நிரம்பியதும், பொறுப்பு நிரம்பியதும் ஆன ஒரு பதவிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறீர்கள். இன்முகம் காட்டி, அன்பு செலுத்தி வந்த மறைந்த பெரியார் டாக்டர் யூ. கிருஷ்ணராவ் இந்தப் பதவியை வகித்தபோது எல்லோரிடமும் இனிதாகப் பழகி நடுநிலையில் நடந்து கொண்டார். சபாநாயகர் செல்லபாண்டியன் பத்தமடை பாய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குத் தலைவராக இருந்ததாக அறிந்தேன் பத்தமடைபாய் மிக மிருதுவானது. பத்தமடை பாய் போல மிருதுவான மென்மையான இதயத்தைப் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் (செல்லபாண்டியன்) பெயருக்கு ஏற்றபடி சிறுபான்மையினரான எதிர்க்கட்சியினரிடம் செல்லமாக நடப்பீர்கள் என்று நம்புகிறேன். எதிர்க்கட்சிதானு செல்லப்பிள்ளை ஆளும்கட்சியிடம் செல்லம் காட்டக்கூடாதா என்று என் எதிரில் அமர்ந்திருக்கும் அமைச்சர் பக்தவத்சலம் விழிகளாலேயே கேட்பது எனக்குப் புரிகிறது. ஆளும் கட்சிக்கு அதிகச் செல்லம் காட்டினுல் பிள்ளை கெட்டுவிடும். எதிர்க்கட்சியில் 70-க்கும் குறைவான அங்கத்தினர்களே இருக்கிருேம்.

ஆட்சி என்ற சக்கரத்தின் அச்சாணியாக எதிர்க்கட்சியை நினைக்க வேண்டும். ஆட்சி என்ற தேரைச்செலுத்தும் சாரதிக்கு இது தெரியும். அதனுல்தானே என்னவோ பார்த்தசாரதியைத்துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்.

எதிர்க்கட்சி ஆளும் கட்சிக்கு நிழலாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது கூடாது. எதிர்க்கட்சியை, நிலைக்கண்ணுடியாக ஆளும் கட்சியினர் கருதி தன் முகத்தில் (நிர்வாகத்தில்) உள்ள மருக்களையும் வடுக்களையும் (குற்றம், குறைகளைக்) கண்டு திருத்திக்கொள்ளவேண்டும்.

∴

கே. எ. மதியழகன்

சபாநாயகர் அவர்களே!

தாங்களும் உதவி சபா நாயகராக கனம் பார்த்தசாரதி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் உரிமையாக்குகிறேன்,

இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் விரும்பிப் பெறக்கூடிய மிகப் பெரும் சிறப்புக்களில் ஒன்ருன சபாநாயகர் பீடத்தை பெற்றிருக்கிறீர்கள்.

உங்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததற்காக ஆளுங்கட்சித் தலைவரும் நிதியமைச்சருமான கனம் பக்தவத்சலம் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு பாராட்டுதல் தெரிவித்திருக்கிருர்.

ஆனுல் இன்னமும் ஒரு பெரும் சிறப்பை நாங்கள் பெற விரும்பினேம். தங்கள் பெயரை தி. மு. கழகத்தின் சார்பில் முன்மொழிய இருந்தோம் எங்களது வழிகாட்டியும் தி. மு. க. பொதுச்செயலாளருமான அறிஞர் அண்ணு அவர்கள் தாங்கள் இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் வினடிவரை தாங்கள் சார்ந்திருந்த கட்சியினருக்கு விடுத்திருந்த வேண்டுகோள் விழலுக்கிரைத்த நீராகி விட்டது. எனவே, அந்த சிறப்பை எங்களால் பெறமுடியவில்லை தாங்கள் சார்ந்திருந்த கட்சிக்கும் எங்களுக்கும் ஆழமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை அறிவீர்கள். அதேபோல் எதிர்க்கட்சிகளுக்கு மத்தியிலும் வேறுபாடுகள் நிச்சயமாக இருக்கத்தான் செய்கின்றன.

இந்த மாநில மக்களின் நலன்களை முக்கியமாகக்கொண்டு என்ன தான் ஒத்துழைத்தாலும் இந்தக் கருத்து வேற்றுமைகள் பீறிடத்தான் செய்யும். அந்நேரங்களில் இந்த மாமன்றத்தின் உரிமைகள் சலுகைககள், ஆகியவற்றின் பாதுகாவலராக தாங்கள் செயல்படுவீர்கள் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை. ஒத்துழைப்பு என்பது ஒரு சார்புடையதல்ல கடமையும் உரிமையும் ஒன்ருேடொன்று உறவுமுறை கொண்டது. ஒன்று மட்டும் சொல்லிக்கொள்வேன். தன்னுடைய தன்மானத்துக்கு ஊறு நேருகிற நேரத்தில் எந்த தனி மனிதனும் பொறுத்துக் கொள்வதில்லை. தனது கற்புக்குபங்கம்வரும் நேரத்தில் தாய்க்குலம் சகித்துக் கொள்வதில்லை. தன்னுட்சிக்கு ஆபத்துவரும் நேரத்தில் எந்த நாடும் அதனை அறைகூவலாக எடுத்துக்கொள்கிறது. இந்த அடிப்படையில் தங்களது ஆணைக்குக் கட்டுப்பட்டு கட்டளைக்குப் பணிந்து இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆக்க, தமிழக நலன்கள் நம்முடைய கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவிலிறுத்தி ஒத்துழைக்க காத்திருக்கிருேம்.

பாராளுமன்றம்

•

ஏப்ரல் 16-ல் கூடுகிறது. அன்று உறுப்பினர்கள் பதவி உறுதிமொழி அளிப்பர்.

பாராளுமன்ற மேல்சபை

ஏப்ரல் 17-ல் கூடுகிறது. புதிய உறுப்பினர்கள் அன்று பதவி உறுதி மொழி அளிப்பர்.

தமிழக சட்டமன்றக் கூட்டுக் கூட்டம்

•

ஏப் 23ல் நடைபெறும்

தமிழ்நாடு சட்டமன்றம், மேல் சபையின் கூட்டுக்கூட்டம் ஏப்ரல் 23-ம்நாள் காலை 11 மணிக்குக் கூடும். கவர்னர் உரையாற்றி சட்டமன்றக் கூட்டத் தொடரைத் துவக்கி வைப்பார்.

மறுநாள் முதல் சட்டமன்றம் காலை 8-30 மணிக்குக் கூடும்; சுமார் 10 நாட்களுக்குக் கூட்டம் நடைபெறும்.

மேல்சபை ஏப்ரல் 21-ந் தேதி பிற்பகல் 3 மணிக்குக் கூடும். புதிய உறுப்பினர்கள் அன்று பதவி உறுதிமொழியேற்பர்.

தோழர் முத்து குற்றவாளி அல்ல

——|0|——

மதுரைவழக்கில் தீர்ப்பு

○



மதுரைமாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் உட்பட அறுவர்மீது தொடரப்பட்டிருந்த வழக்கில், தோழர் முத்து அவர்களும் மற்ற தோழர்களும் குற்றவாளிகள் அல்ல என்று மதுரை உதவி செஷன்ஸ் நீதவி பி. எஸ். இராமலிங்கம், அவர்கள் 29-3-62 அன்று தீர்ப்பளித்தார்.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டதும் ஏராளமான கழகத்தோழர்களும் பொதுமக்களும் தோழர் முத்துவுக்கு மலர்மாலைகளைச் சூட்டித் தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

கேட்டிட்டுண்டோ! கேட்டிட்டுண்டோ!
கேரள சத்தம் கேட்டிட்டுண்டோ!

கேட்டிட்டுண்டு! கேட்டிட்டுண்டு!
ஞான் பறயுந்நதும் குறச்சு கேள்க்கணம்!

"திராவிட நாடு கோருபவர்கள் பைத்தியக்காரர்கள்."

நேரு பொழிந்த திருவாசகமில்லை இது பொதுவுடமையர் தொடுக்கும் கணை.

"எங்களையும் சேர்த்துத் திராவிட நாடு கேட்க இவர்கள் யார்?"

சஞ்சீவியார் எனும் ஆந்திரரின் சங்கநாதம் இல்லை; தலைகாட்டும் கேரளத்தோழர் ஒருவரின் கேள்வி தான், இது!

தி.மு. கழகம் என்றொரு விடுதலை இயக்கம் இருப்பதையே தம் வாசகர்களுக்குத் தெரிவிக்கக்கூடாது என்று இருட்டடித்தவர்கள் தான், இப்படிக் கொதித்தெழுந்திருக்கிறார்கள்!

கேலி மொழி சிந்தியவர்கள் தான்—தி. மு. கழகத்தின் பெயரை எழுதினாலே தீட்டுப்பட்டுவிடும் என்று கருதியவர்கள் தான்—இப்போது கொதித்தெழுந்திருக்கிறார்கள்; கடு மொழிக் கணைகள் தொடுக்கிறார்கள்!

அவர்கள் மாற்றுக்கட்சியினரை அலட்சியப்படுத்தியே பழக்கப்பட்டவர்கள். பாவம்! அலட்சியங்களையும் எளனங்களையும் கடந்து கழகம் புதிய அரசியல் அந்தஸ்தைப் பெற்றுவிட்டதென்றதும், பத்திரிகை துப்பாக்கிகளைத் தூக்குகிறார்கள்; மனம் போன போக்கில் சுடுகிறார்கள். மதி மயங்கித் தங்கள் கழுத்துக்கே துப்பாக்கிப் பிடித்து கொள்ளும் அவர்களுக்கு ஓர் 'ஐயோ!'

ஆனால் மதிமயங்கிய நிலையில் தன் கழுத்துக்கே கொலைவாளைப் பாய்ச்சும் பரிதாபத்திற்குரியவர், மலைஞாலத்துப் பொதுவுடமைக் கட்சி ஏட்டாசிரியராய் இருப்பதால் ஓரிரு சொற்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் சுதந்திர திராவிட நாட்டில் தமிழ் நாடு மட்டுமன்று—கன்னடமும் ஆந்திராவும் கேரளமும் கட்டாயம் உட்படுத்தப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

கேரள ராஜ்யம் இந்திய தேசத்தினின்றும் பிரிந்து சுதந்தரமடைய வேண்டுமென்று கூறுவதற்கு இராஜகோபாலாச்சாரிக்கும் அண்ணாதுரைக்கும் என்ன அதிகாரமிருக்கிறது?"

தோழர் தாமோதரன் நவயுகம் எனும் ஏட்டில் ஆசிரியப் பொறுப்போடு எழுதிய கட்டுரைவாயிலாக இப்படிக் கேட்டிருக்கிறார். இவ்வேடு மலைஞாலத்துப் பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரபூர்வ ஏடு. கிழமைதோறும் வெளிவருவது.

சராசரிச் சிந்தனைக்காரர்களுக்கும் தாமோதரன் நாலுகால் பாய்ச்சலில் பாய்வதின் நோக்கம் புரியும். தோழரின் ஆவேசம் வெறும் ஆர்ப்பாட்டமாகவே முடியும். காரணங்களைக் காட்டுகிறோம். மலைஞாலத்துத் தோழர்களே! பொதுவுடமையினரின் பேச்சைக் கேட்டு 'நாடு என்பதும் இரஷ்யாவே! ஏடென்பதும் மார்க்சின் மூலதனமே! என்று நம்பி, செஞ்சேனை வரும் வழியில் விழி வைத்துப் பார்த்துக்கொண்டு உலகத்தைக் காண மறுக்கும் நண்பர்களே!

நாமெல்லாம் திராவிடர்!

நாமெல்லாம் தென்னவர்!

மொழியால் பலராயினும் இனத்தால் ஒருவரே!

வடவர் ஆதிக்கத்தின் இடுப்பொடிந்து விடுதலை வாகை மிலைந்திட வேண்டும்!

நாடெங்கும் புகழ் மணக்கும் மன்னன்—நம் நலம் நாடும் அண்ணன் முழங்கும் விடுதலைப் பாடல் இது! பாடுபவர் ஒலியிலும் நிரடில்லை; சொல்லும் பொருளிலும் குறையில்லை. என்றாலும் மலைஞாலத்துத் தாமோதரன் 'எங்களை சேர்த்துக்கேட்க இவர்கள் யார்?' என்கிறார்.

இன்னும் எங்களைத் தெரியவில்லையா தாமோதரரே! நாங்கள் தான் உங்கள் உறவினர்கள்! எங்களில் ஒருவர் உங்கள் அண்ணன், மற்றொருவர் தம்பி; அடுத்தவரும் உடன்பிறப்பு!

இருந்தும் உங்கள் கேள்வியில் மூன்று கோணங்கள் தெரிகின்றன. யார் நீங்கள் என்பது முதற் கோணம்; இல்லாததைப் பேசும் பைத்தியக்காரர்கள் கழகத்தினர் என்ற எரிச்சல் பேச்சு இரண்டாவது கோணம்.

கொடியவன் வலையில் குடும்பம் விழுந்துவிட்டது. விவரமறிந்த தாய் விடுதலைப்போர் முரசம் தட்டுகிறாள். குடும்பத்தின் களைகளை நொறுக்க முனைகிறாள். அறியாச் சிறு குழந்தையோ கொடியவன் தந்த மிட்டாய்க்கு மயங்கி விட்டது. வஞ்சகன் பேச்சை நம்பி உய்யும் வழி தேடும் தாயின் கோரிக்கையையே சந்தேகிக்கின்றது குழந்தை. தளை நொறுக்கச் சம்மட்டி எடுக்கும் தாயின் காலையே தட்டுவிடுகிறது குழந்தை வஞ்சகன்—வாசாலகன், ஊராரைக் கூட்டி வைத்து இதைக் காட்டி "பார்த்தீரோ! பார்க்தீரோ! பெற்றெடுத்த குழந்தையே வேண்டாமென்னும்போது இவள் விடுதலை கோருகிறாள்! ஊரை ஏமாற்றுகிறாள் அமைதியைக் குலைக்கிறாள்; அடங்காப்பிடாரியாகிறாள்!" என்று வார்த்தைச் சிலம்பம் ஆடுகிறான்.

குழந்தையின் பேச்சை ஊரை ஏமாற்ற உதவும் கருவியாக்கிக் கொள்கிறது அவன் அறிவு!

காங்கிரசுக்காரர்களும் அதைத் தான் செய்கிறார்கள். முன்னர் ஆந்திரக்குழந்தையாம் சஞ்சீவி சொன்ன போதும் கொட்டை எழுத்தில் போட்டு மகிழ்ந்தார்கள். புதுக்கட்சித் தம்பிரானும் 'விரும்பாத ஆந்திரர்களையும் சேர்த்துக் கொண்டு திராவிடம் கேட்பானேன் என்றார்; தொடர்பில்லாத விஷயத்தில் தலையிடுவது மட்டும் அரசியல் நாகரிகமாகப்பட்டது அவருக்கு!

இப்போது தாமோதரன் எழுத்துக்கும் தமிழக ஏடொன்று சுடச் சுடத் தலைப்புப் போட்டிருக்கிறது; அரிய பெரிய வாதக்கணை போல் தந்திருக்கிறது.

தாமோதரன் எழுத்தும் சஞ்சீவியின் பேச்சும் புதிய வாதங்களல்ல. ஏற்கனவே போர் முகத்துக்கு வந்துவிட்டுப் போன—கூர் மழுங்கிப்போன கணைகள் தான்.

வார்த்தைகள் தான புதியனவே ஒழிய வாதங்கள் பழையனவே தான்!

குப்பிதான் புதியதே ஒழிய, மது பழையது தான்!

வாளெடுத்திடும் கைகள் தான் புதியனவே ஒழிய, வாள் பழையது தான்; முன்னர் களத்திற்கு வந்து முனை மழுங்கிப்போனது தான்!

மா. பாண்டியன்

முன்னம் பட்ட அடி மறந்ததனால் தான் மறுபடியும் அடியெடுத்து வைக்கின்றன!

பிறைக்கொடி ஏந்திய முஸ்லீம் லீக் தமக்கெனத் தனிநாடு கேட்ட போதும் இதே வாதத்தைத் தான் கிளப்பினர்.

காங்கிரசில் இருந்த இந்துத் தலைவர்கள், தாம் தாக்கியது போதாதென கூலிக்குச் சில முஸ்லீம்களையும் இழுத்துவந்து கூவ விட்டனர்! கூலி பெற்றோர் கூவுவதை ஒலிபெருக்கிக் கொட்டி மகிழவும் செய்தனர்! இந்தப் பணியைத் தலையாய கடனாகக் கொண்டு. பத்துப் பதினைந்து கட்டுரைகளை எழுதியும் தீர்த்தார் கே. எம். முன்ஷி. அப்போது அவர் காங்கிரசின் தூணல்லவா! அதனால் தான் கூலிகள் பேச்சை இப்படியெல்லாம் எடுத்துக்காட்டினார்.

'பாகிஸ்தான் கிடைக்காது; பிறைக்கொடி பறக்காது; பிரிவினைப் பேச்சு பலிக்காது' என்பதற்கு அவர் காட்டிய முதற் காரணம் 'முஸ்லீம்களே அதை அனுமதியார்! என்பது தான்.

ஆதாரமாகப் பலரது பேச்சுக்களை எடுத்துக்காட்டவும் செய்தார்.

'இந்திய முஸ்லீம் சமுதாயத்தில் பாதித் தொகையினர் மோமின்கள். அவர்கள் முஸ்லீம் லீகைத் தங்கள் அரசியல் பிரதியாக ஏற்றுக்கொள்ளக்கூட இல்லை!' என்று அப்துல் கயூம் அன்சாரி என்பார் சொன்னதை எடுத்துக்காட்டினார்; அவர்களே எதிர்க்கையில் பிரிவினை நடக்காதென்றார் முன்ஷி!

அனைத்து வங்க உழவர் சமிதித் தலைவரான சையத் ஹபிபுர் ரஹ்மான் சொன்னாராம், 'முஸ்லீம்களா

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு
சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மனத்தில் மிகுந்த
செல்வம் ராணி
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்:
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம் ரோடு-தஞ்சை

கிய நாங்கள் இந்தியாவை எங்கள் தாயகமாக ஏற்றுக்கொண்டுவிட்டோம்' என்று. அதையும் எடுத்துக்காட்டினார் முன்ஷி !

பிரிவினை எதிர்ப்பு மாநாட்டில் பேசிய முகமத் யூசுப் என்ற முன்னாள் மத்திய மாகாண அமைச்சர், 'பிரிவினை நடந்தாலும் பாகிஸ்தான் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?' என்று கேட்டாராம். முன்ஷியின் பேனா அதையும் எடுத்தெழுதியது.

மகொமெத்பாய் ரௌஜி என்பார் இஸ்மாயிலி கோஜா சமூகத்தின் தலைவராம். 'பாகிஸ்தான் பிரிவினை அரசியல் தற்கொலை; பொறுப் புணர்ந்த இஸ்லாமியர் அதை அனுமதியார்' என்றாராம். முன்ஷியின் பார்வையில் அதுவும் பட்டது.

இத்தனை முஸ்லீம்கள் சொன்னதை எல்லாம் எடுத்துக்காட்டியது பற்றாதென்று நினைத்தார் போலும் முன்ஷி. சீக்கியர்களும் இப்பிரிவினையை அனுமதியார் என்று சொன்னதோடு நிற்கவில்லை. பிரச்னைக்கு எவ்வழியிலும் தொடர்பற்ற டாக்டர் வி. கே. ஜான் 'இந்தியக் கிருத்தவர்கள் பாகிஸ்தான் பிரிவினையை எதிர்க்கின்றனர், என்று திருச்சியில் எடுத்துச்சொன்னதையும் பம்பாயிலிருந்த முன்ஷி விட்டுத் தொலைத்தாரில்லை.

இவ்வளவையும் எடுத்துக்காட்டி 'எதிர்ப்புகளைப் பார்!' இஸ்லாமியரே எதிர்க்கின்றனர் ! எனச் சுட்டிக்காட்டி 'பிறைக்கொடி என்பது பறக்காது; பிரிவினை என்பதும் நடக்காது!' என்றார்.

நடந்ததென்ன? முன்ஷியும் அவரது கூட்டாளிகளும் கூலிக்கு வந்த இனத்துரோகிகளுமாக எல்லோரும் சேர்ந்து கடைசியிலே சுதந்தர பாகிஸ்தானுக்கு வாழ்த்து மழைபொழிந்தனர். அதையும் ஒரு நாடென்று ஒப்புக்கொண்டு அதற்குத் தூதுவரையும் அனுப்பிவைத்திருக்கின்றனர். அங்கிருந்து வந்த தூதுவர்க்கும் மரியாதை தந்திருக்கின்றனர்.

துணைக்கண்டத்தில் சில துரோகிகள் கொட்டித்தொலைந்த வாசகங்களை வைத்துக்கொண்டு வெள்ளையர்கூடச் சொல்லினர். 'இந்தியர்களே எதிர்க்கின்றனர் என்றாலும் காங்கிரசார் நாட்டு விடுதலை கேட்கின்றனரே!' என்றனர். நடந்ததென்ன இறுதியில் ?

இவை காட்டும் பாடம் என்ன? முடிவு என்ன? உணர்த்தி வரும் பொருள் என்ன? இதுதான்:

எந்த ஒரு கோரிக்கைக்கும் எதிராகச் சில கருங்காலிகள் முளைக்கக் கூடும்! எரிச்சலாலோ பொருமையாலோ—ஏதும் அறியாததாலோ, எவனுகிலும் காட்டிய இலட்சங்களுக்கு மயங்கியதாலோ சிலர் சாடிக் கிளம்பலாம்; தாயக விடுதலைக் கோரிக்கைகளுக்குக் கேடு சூழலாம்.

ஆனால்.........

காரிருள் சூழ்வதால் கதிரவன் மறைவதில்லை !

காற்றடிப்பதால் வீடு விழுவதில்லை !

அட்டைக் கோபுரங்கள் அல்ல திராவிடரின் உணர்ச்சிகள், அடிக்கின்ற காற்றுக்குக் கீழே விழ !

மணலாலடைந்த கரையல்ல கழகத்தின் வலிவு, வருகின்ற எதிர்ப்பு 'வெள்ள'த்திற்கு பிளந்து விழ.

ஓர் உண்மையை ஒப்புகிறேன். உங்கட்கும் சொல்லுகிறேன்.

நான்கு மாநிலங்களிலும் கழகத்தின் கொள்கை நன்கு வேர் விட்டு விடவில்லை—தமிழ் நாட்டிலிருப்பது போன்று. இதை ஒப்புக் கொள்வதில் வெட்கமில்லை. அதே நேரத்தில் நான்கு மாநிலங்களிலும் விடுதலை முழக்கம் ஒருமித்துக்கேட்கும் நாள் தொலைவிலில்லை என்பதையும் உணருங்கள்.

இன்று கேட்கிறீர்கள் 'யார் இவர்கள் திராவிடம் கேட்பதற்கு?' என்று எங்களைப்பார்த்து !

நாளை கேட்பீர்கள் 'யார் நீங்கள் எம்மை ஆள்வதற்கு?' என்று தில்லியைப் பார்த்து.

அந்த நாள் தொலைவிலில்லை.

தாமோதரரே! உணர்ச்சி வசப்பட்டு அண்ணாவையும் ஆச்சாரியாரையும் 'பைத்தியக்கார பிரமுகர்கள்' என்று நீங்கள் குறிப்பிட்டுள்ளது வாதத்திற்குரியது !

அண்ணா ஆச்சாரியாரோடு கொண்டிருந்த தேர்தல் தொடர்பைக் கண்டிருக்கிறீர்கள், ஆந்திரச் செஞ்சேனையர் சுதந்தராக்களுடன் அதிகார பூர்வமாகக் குலவியதை மறந்து. அது ஒரு புறம் போகட்டும்.

திராவிட விடுதலை கோருவது கன்னட, ஆந்திர மலையாள உடன்பிறப்புகளின் 'அபிலாஷைகள் துவம்சம் செய்யவே' என்று எழுதியிருக்கிறீர்கள். இவர்கள் இப்படி ஓர் 'ஏகாதிபத்திய'த்தை நிலை நாட்ட முயல்வதாகக் கூறி 'ஊளம் பாறை'பைத்திய மருத்துவமனைக்கு வெளியே இவர்கள் எப்படி விடப்பட்டார்கள்?' என்று நீங்கள் கேட்கிறீர்கள்! அதாவது நேருவின் சீடராகிறீர்கள்!

அத்தோடு நீங்கள் 'இக்கட்டுரையை கம்யூனிஸ்ட் பத்திரிகை அலுவலகத்தில் உட்கார்ந்து எழுதாமல், கள்ளிக்கோட்டையிலோ கீழ்ப்பாக்கத்திலோ இருந்து கொண்டு எழுதினீர்கள்' என்று சிலர் சொல்வதும் எங்கள் காதில் விழுகிறது. வெளியில் இருந்தால் உங்களை நேரிலேயே அழைத்து புத்தி சொல்லி அனுப்பலாம். இல்லாததால்தான் இப்படி எழுதுகிறேன்.

தி. மு. கழகத்தின் கொள்கைகளும் கூற்றுகளும் புரட்டானவை என்று எழுதியிருக்கும் 'புத்தி சரியாய் உள்ள' தோழரே!

திராவிடர் என்றோர் இனம் உண்டு. இந்த உண்மையை உங்கள் வரலாற்றுப் பேராசிரியரே ஒப்புக் கொண்டிருக்கிறார். ஒரு முறைக்கு இருமுறை அவரது பேச்சைப் படித்துப் பாருங்கள். நம்மின பண்பாட்டையும் இனவழி இணைப்பையும் உறவையும் அவரே அழகாகச் சொல்லியிருக்கிறார் இரண்டாண்டுகளுக்கு முன்பு. இதனால் 'நாமெல்லாம் திராவிடர்? என்ற உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டு விடும்.

அடுத்த வாதம் வடவர் நம்மை வாட்டுகின்றனர் என்ற பொருளாதாரக் கொள்கை. வடவர் தென் மாநிலங்களைத் திட்டங்களிலும் பிற பணிகளிலும் தொடர்ந்து வஞ்சிப்பதே இதற்குத் தக்க சான்று. இதைக் கேரளத்தின் தெருக்களிலும். சட்டமன்றத்திலும் டில்லிப் பாராளுமன்றத்திலும் பொதுவுடமையரே விளக்கியுள்ளனர்.

அண்மையில் கேரளச் சட்டமன்றில் காங்கிரசு விசுவநாதன் இந்தியைக் கண்டித்து முழங்கியதுகூட ஒருபுறம் போகட்டும்.

உங்கள் கட்சித் தூணெனச் சொல்லப்படுபவரும் இந்தியாவிலமைந்த முதல் பொதுவுடமையர் அமைச்சரவையின் முதல் முதலமைச்சர் என்ற பெருமையைப் பெற்றவருமான சங்கரன் அவர்களே கேரளச் சட்டமன்றில் வடவராதிக்கத்தை எதிர்த்துக் குரலெழுப்பினரே! திட்டங்களில் கேரளம் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. இதைக் கண்டிக்க நாம் சட்டமன்றில் தனிக்கூட்டம் கூட்டி எல்லாக் கட்சியினரும் சேர்ந்து கூட்டுக் குரலெழுப்பவேண்டும்; தில்லியிடமிருந்து உரிய பங்கைப் பெற வேண்டும் என்று குரலெழுப்பவில்லையா? வெளியிலும் ஆர்ப்பாட்டங்கள் செய்யவில்லையா?

அண்மையில் இரண்டொரு நாட்களுக்கு முன். ஆந்திரச் சட்டமன்றில் பேசிய பொதுவுடமையரும் எதிர்க்கட்சித் தலைவருமான சுந்தரையாகூட இப்படித்தானே குரலெழுப்பினர்;

''மாநிலத்தின் மூன்றுவது திட்டத்திற்கு மத்திய அரசினர் போதுமான அளவு நிதி ஒதுக்கவில்லை. மேலும், இந்த நிதி போதாது. மேற்கொண்டு நிதி ஒதுக்கவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்கவாயில்லை!''

கேட்டவர் சுந்தரையா. இன்னும் விளக்கமாகத் தெரியவேண்டுமானல் 26—3—62ம் நாளைய 'ஜன சக்தி' ஏட்டை புரட்டுங்கள்.

இவையெல்லாம் காட்டுவது எதை ?

தில்லியின் ஆதிக்கமும் வடவரின் சுரண்டலும் உணரப்பட்டு விட்டன; எதிர்ப்பும் கிளம்பிவிட்டது. தக்க உருவம்தான் அதற்கு இன்னும் தரப்படவில்லை—என்பதைத்தானே முண்டசேரி, சங்கரன், சுந்தரையா ஆகியோர் பேச்சு காட்டுகின்றன.

இத்தனை நாளும் புறக்கணித்து வைத்திருந்த நவயுகமும். விமர்சனம் செய்யப் புறப்பட்டு விட்ட தென்றால் என்ன பொருள்?

விளங்குகிறதா தாமோதரனுரே! விடுதலைக்காற்று உங்கள் மூக்குக்கும் நல்லதாய் படத் தொடங்கி விட்டது. இத்தனை நாளும் எங்கேயோ குடியிருந்த பாவத்தால் அதைச் சொல்ல மிரள்கிறீர்!

மிரட்சி விரைவில் நீங்கும்; தில்லிக்கெதிராக உங்கள் கையும் ஓங்கும்; தாயக விடுதலைக்கொடியை உங்கள் கையும் தாங்கும்!

அந்த நம்பிக்கையுடன் தமிழ்த்தம்பி அழைக்கிறேன்; தாமோதரரே; வாரீர்! 'திராவிடத் தாயகத்தை ஆள்வதற்கு நேரு யார்?' என்று கேட்போம்; விரைவில் வாரீர்; இன அணியில் சேரீர்!

●

நக்கீரர் கழகம், சென்னை.

பேராசிரியர் கா. நமச்சிவாயர் இலக்கிய வகுப்பு

——(o)——

மேற்படி கழகச் சார்பில் நிகழும் 10—12—61 முதல் ஒவ்வொரு ஞாயிறு காலை 10 மணி முதல் 11 மணிவரை ''பத்துப்பாட்டுத் தொடர் சொற்பொழிவுகள்'' திருவாளர் வித்துவான் கா. சி. தனக்கோடி அவர்களால் (ஆசிரியர், தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளி) நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ் பயில விரும்பும் அன்பர்கள் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

இடம்: ''தமிழகம்'' 27, கொண்டலையர் தெரு, பெத்துநாயக்கன் பேட்டை, சென்னை-1.

—நக்கீரர் கழகத்தினர்.

பம்பாயில் தி. மு. க. வெற்றி விழா

*

22—3—62 அன்று மாலை 7-30 மணிக்கு, தாராவி தி. மு. கழக சார்பில் வெற்றி விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. துணைச் செயலாளர் மா. தியாகராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசி, செயலாளர் து. பாண்டியன் அவர்களை தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார். தலைவரின் முன்னுரைக்குப்பின் தோழர்கள் நெல்லை சு. தங்கையா, நெல்லை செழியன், பி. எஸ். எஸ். பாண்டியன், தங்கவேலன் எம். செல்வநாதன், மணிமொழியார் புத்தரசு ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள். இறுதியாக நெல்லை மாவட்ட செயலாளர் எம். எஸ். சிவசாமி பேச எழுந்ததும் தாராவி தி. மு. கழகம், இலட்சுமிசால் எம். ஜி ஆர். மன்றம், அபுபக்கர்சால் அண்ணா படிப்பகம், எஸ். எஸ். ஆர். உடற்பயிற்சி மன்றம் தாராவி எம். ஜி. ஆர். [illegible] மன்றம், தாராவி சௌந்தரபாண்டியனர் பகுத்தறிவு மன்றம், தென்னவர் பொருளியற் கூட்டுறவு பேரவை, லேபர்கேப் எம். ஜி. ஆர். மன்றம், மாதுங்கா தி. மு. கழகம், செம்பூர் தி. மு. கழகம் ஆகிய அமைப்புக்களின் சார்பாக கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. பின் திரு எம். எஸ். சிவசாமி தமிழக அரசியலில் கழக வளர்ச்சி குறித்து நீண்டதோர் உரை நிகழ்த்தினர்கள். (முழுப்பேச்சு பின்னர் வரும்.)

உடனே தேவை

*

திராவிடன் இதழுக்கு கீழ்க் கண்ட ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

செங்கற்பட்டு	...	திருச்சி
காஞ்சிபுரம்	...	மணச்சநல்லூர்
குன்றத்தூர்	...	தொட்டியம்
மீஞ்சூர்	...	ஈரோடு
மதுராந்தகம்	...	கோவை
ஆம்பூர்	...	குன்னூர்
ஆண்டிமடம்	...	கணியூர்
ஆடுதுறை	...	பொள்ளாச்சி
மதுக்கூர்	...	வத்தலக்குண்டு
வேதாரண்யம்	...	கீழாவூரணி
நாகூர்	...	பரமக்குடி
திட்டக்குடி	...	சிவகெங்கை
திருவனந்தபுரம்	...	ராசபாளையம்

விவரங்கட்கு

நிர்வாகி: திராவிடன்

163. வால்டாக்ஸ்ரோடு, சென்னை 1

மதோன்மத்தர்களுக்கு முதல் எச்சரிக்கை!

வைரமுடி சிரித்தது!

தங்கச் செங்கோல் பளபளத்தது! பராக்குக் கூறுவோரும்; பல்லாக்குத் தூக்குவோரும்; பல்லாண்டு வாழ வாழ்த்துப் பா பாடி நிற்போரும் பல்லாயிரமாகத் திரண்டிருக்கும் காட்சி! ……… அங்கே வீரத்திரு விழியின், ஆணவ மொழியின் மாட்சி!

……… இத்தகைய சித்தரிப்பு பழைய மன்னர் கால வர்ணிப்பாக இருந்த நிலை மக்களாட்சி முறைக்குப் பிறகு மாறித் தீர்ந்தது. தொடமுடியாத தோட்டத்து ரோஜாக்களெல்லாம் வாடி வதங்கிப் பாதையிலே கொட்டிக்கிடந்தன!

ஏழைக்கு வந்த 'அரசியல்' ஏற்றங் கொண்டவனுக்குச் சாவுமணி ஒலிக்க வைத்தது. அந்த மணியோசையிலே……… ஆதிக்க நினைவும், கனல் கக்கிய விழிகளும், எதையுமே எப்போதுமே அடித்துப் பேசிய வாய்களும் மூடிக் கொண்டிருந்தன.

தைப்பற்றியும் பேசிக்கொண்டே அரசு பீடமேறியவர்கள், அழுது கொண்டே இந்தத் திங்கள் பீடமிறங்கியதை நாமறிந்தோம்—நாடறிந்தது. சாயம் மங்கி தளர்நடை போட்டுக்கொண்டிருக்கும் அவர்களை நினைவு வளையத்தருகே நிறுத்தியுள்ளேன். சோகப் பாலத்தருகே சுமைதாங்கியாக மக்கள் தீர்ப்பை ஏற்று நிற்கும் அவர்களைக் காணுங்கள்……மக்கள் சக்தியின் சாதனையை நினைவு கொள்ளுங்கள்.

* ஏக இந்தியாவின் அச்சு என்று கூறப்படும் டில்லி தேவதைகள் நடமாடும் மத்திய அரசின் 'வானொலிப்பெட்டி'……என்று பல்லோராலும் காங்கிரஸ் நல்லோராலும் பாராட்டப்பட்ட டாக்டர் பாலகிருஷ்ண விஷ்ணுகேஸ்கர் ஆளும் பீடத்தைவிட்ட பரிதாபத்திற்குரிய முறையில் ஆளாக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்தே தொழில்துறை துணை அமைச்சரான—எல், என். மிஸ்ராவும் மக்கள் சக்தியால் தோற்ராலும் வீழ்த்தப்பட்டிருக்கின்றனர். மந்திரிகள் ஏழு பேருக்கும் மக்கள் தீர்ப்பெழுதி முடித்தனர். தீர்ப்புக்குப்பிறகு இதோ தலை இறக்கத்தோடு அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

* மைசூரில்………

உள்துறை அமைச்சர் பசப்பா, டாக்டர் கௌடய்யாவால் தோற்கடிக்கப்பட்டார். இந்த கௌடய்யா கடந்த பொதுத்தேர்தலில்

மா தங்கவேலர்

பசப்பாவோடு போட்டியிட்டுத் தோற்றவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். கூட்டுறவுத் துறை அமைச்சர் மாலி மாடியப்பா, சுயேட்சை வேட்பாளரால் முறியடிக்கப்பட்டார். சுகாதார மந்திரி ஹெஜ்ஜும், மந்திரி லிங்கப்பாவும், பெண்மந்திரி லீலாவதியும், மந்திரி லிங்கா ரெட்டியும், மந்திரி ரசியா, மந்திரி ருத்ரப்பா ஆகியோரும் நல்

* ஆந்திர பிரதேசத்தில் துணை முதன்மந்திரி கே. வி. ஆர். ரெட்டி சுயேட்சை வேட்பாளரான 'வந்தே மாதரம்' ராமச்சந்திரராவால் படு தோல்வியடைந்து, பதவியை விட்டு இறங்க மனமில்லாமல் சபலத்தோடு கீழிறங்கினார்.

* மேற்கு வங்காளத்தில், தொழில்துறை அமைச்சர் அப்துல் சத்தார், தோல்வியடைந்தார். அவரைத் தொடர்ந்தே அமைச்சர் சதீஸ் சந்திரராயும், பிம்பதி மஜூம்தாரும் பதவி இழந்தனர், பெருந் தோல்வியின் காரணமாக—மக்கள் விழித்துக்கொண்டதன் மூலமாக!

* பீகாரில், படேஷ்வர் பிரசாத் துணை அமைச்சர் லலிதேஷ்வர் பிரசாத்தை வெற்றி கொண்டு வாகை சூடி, ஆதிபத்தியத்துக்கு குழிவெட்டித் தள்ளி ஆணவத்தைக் கண்மூட வைத்தனர்.

மேலும் அஸ்ஸாமில் ஹரேஸ்வரர் பிரசாத் என்ற ரெவினியூ மந்திரியும், ஆந்திரத்தில் கே. வி. ரெங்காரெட்டியோடு, கொண்டா

திக்கெட்டும் திரண்டு வரும் மக்கள் சக்தி!

மணியோசைக்குப் பிறகு சாதாரண மனிதனின் இதயத்திலே இலட்சியத்தின் எதிரொலி கிளம்பியது. கண்ணீருக்குப் பிறகு அவனால் சிரிக்க முடிந்தது. அந்தச் சிரிப்பொலியிலே 'மணிமுடி' உருண்[illegible]

[illegible]

……எங்கோ இருளுக்குப் பின்னே பதுங்குமிடந் தேடிக் கொண்டிருந்தன.

சாவுமணியடிக்கப்பட்ட மன்னராட்சிக்குப் பிறகு மலர்ந்த மக்களாட்சி முறை, ஒளி வெள்ளத்தருகே மக்களை இழுத்துச் சென்றது.

தேனாறு சிந்துபாடி ஓடிவந்தது!

……துள்ளிவந்த புள்ளி மான்களுக்குப் பின்னே, கொடும் புலிகளும் படையெடுத்து வந்தன…… பசுத்தோல் போர்த்திக்கொண்டு. பசுவும்—மானும் தேனாறு அருகே! பாச மொழியும் பாகு மொழியும் பெருகி வந்தது. ஜரிகைத் துண்டுகளும், வைர முடி இழந்தவர்களும்—முடிசூடாத மன்னர்களாக—உருவெடுத்தவர்களும், மக்களாட்சிக்கு மதிப்புத் தந்திருந்தவர்களிடையே நெருங்கி வந்தனர். பசுத்தோல் போர்த்திய புலி தேனாற்றுப் புள்ளிமான் கூட்டத்திடையே பாய்ந்து வந்ததுபோல!

மக்களாட்சி மலர்க் கூட்டத்துக்கிடையே ஆதிக்க வண்டு மறைந்து கொண்டது. வைரமுடி தாங்கிகளிடம் மக்களாட்சியின் முரசொலி கிளம்பிற்று! நம்பியவர்களுக்குக் காலம் உண்மையைச் சொல்லியது. பெரு மழையிலே சாயம் மங்கி சுய உருவம் தெரிந்தது.

இதோ………மக்களாட்சியின் மாண்பு பற்றியும், அதன் வீரதீரத்

கடிக்கப்பட்டார். வர்த்தகத்துறைத் துணை அமைச்சரான சாதீஸ் சந்திராவும், அதே மத்திய பீடத்தில் இடம் பிடித்திருந்த அணில் சந்தாவும் படுதோல்வியடைந்தனர்.

[illegible]

……சந்தாவையும் காப்பாற்றிவிடவில்லை. மத்திய அமைச்சர்களுக்கு நேர்ந்த கதி இது! சொல்லொன்றும் செயல் வேறுமாக மாறுபட்டவர்களுக்கு மக்கள் தந்த அமைதியான தீர்ப்பு. கேஸ்கர் குப்பல் விடைபெற்று ஒதுங்கிக்கொண்டிருக்கிறது. அவர்களின் ஆண்ட நினைவு பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டது!

* ராஜஸ்தானில்……

7 மந்திரிகள் மண்ணைக் கல்வினர். 'ஆண்டது போதும், மக்கள் மாண்டது போதும்' என்று அடித்துச் சொல்லி, பதவியைவிட்டு அந்த ஏழு மந்திரிகளையும் மக்கள் சக்தி விரட்டி விரட்டி அடித்தது. குறிப்பாக, உள்துறை அமைச்சரான ராம்கிஷோர் வியாசுக்கு 'டெபாஸிட்' கிடைத்ததே பெரும்பாடாகப் போய்விட்டது. ஜனசங்கத் தலைவரான பெய்ரான் சிங் கிட்டத்தட்ட பத்தாயிரம் வோட்டு வித்தியாசத்தில் உள்துறை அமைச்சரை முறியடித்து மூலையிலே உட்காரும்படி அனுப்பி வைத்துள்ளார்.

மற்ற ராஜஸ்தான் மந்திரிகளான மதிப்புக்குரிய தாமோதர்லால் வியாஸ்; சுதந்திராக் கட்சி அபேட்சகராலும், தாரிலால், ஜனசங்க வேட்பாளராலும்; சாம்ட்ராம், கம்யூனிஸ்ட் தோழராலும்; பிஸ்நோய்—சுயேச்சையாலும்; பாத்ரி பிரசாத் குப்தா, மற்றுமொரு சுயேச்சை வேட்பாளராலும்; சாம் சந்திர சௌத்ரி, கம்யூனிஸ்ட் அபேட்சக

லாட்சி நினைவினர் தந்த தீர்ப்பை ஏற்று வீட்டுக்கு விடைபெற்றுக் கொண்டனர், மைசூர் மாநிலத்தில் மந்திரிகளின் சோகப் பெருமூச்சு [illegible]

* மத்திய பிரதேசத்தில்……!

[illegible] செய்து கொடுத்துவிட்டு ஓட்டமெடுத்தார், திரும்பிப்பார்க்காமல். தோழர் குமான் சிங் மத்திய பிரதேச உள்துறைத் துணை அமைச்சரான ஜாஜூவை வெளியேற்றினார். மராமத்து இலாக்கா மந்திரியான தசரத ஜெயினை ராமசுரப் வெற்றி கொண்டார். (மராமத்து என்றதும் நமது மாநில பழைய மராமத்து மகானுபாவர் நினைவிற்கு வருகிறாரல்லவா? நல்ல காலம், தப்பித்துக் கொண்டார். இல்லாவிட்டால் இங்கே அவருக்கும் ஒரு இடம் ஒதுக்கவேண்டியிருக்குமல்லவா? இப்போதுதான் எங்கே போய்விட்டார், ஆளுங் கட்சித் தலைவர்……எதிர்க்கட்சித் தலைவரான நமது நாவலரின் கேள்விக் குறிகளுக்குத் தப்பிவிடவா போகிறார். அவ்வளவு இலகுவில் தான் தப்பிவிட முடியுமா?)

மத்திய பிரதேச மந்திரிகளின் தோல்விகளுக்கெல்லாம் சிகரம் வைப்பதுபோல முதன் மந்திரி டாக்டர் கைலாசநாத கட்ஜூவின் தோல்வி அமைந்தது, குறிப்பிடத் தக்கதும் அரசியல் ஆய்வாளர்கள் ஆழ்ந்து கவனிக்கத்தக்கதுமாகும். முதல்வர் முறியடிக்கப்பட்டார். சரித்திரம் திரும்பியது மத்திய பிரதேசத்தில் ஆதிக்கச்சங்கு உடைபட்டு ஒலிதேய்ந்து சிதறியது.

• உத்திர பிரதேசத்தில்………

மந்திரிகளான மங்கள பிரசாத், கைலாஸ் பிரகாஷ், ஜப்ரீ, வாசி நவி, யாதவ் ஆகியோர் வீடு திரும்பினர் பெருவாரியானதோல்வியோடு.

லெட்சுமணனும், தோழியர் மசுமா பேகமும்; பஞ்சாபில் சுராஜ் மல்லும் தாலிபர் சிங்கும்; [illegible]

[illegible] யடைந்து வெற்றியின் கரத்தை சிறப்பித்தார்கள்.

மத்திய மந்திரிகளில் நால்வரும், மாநில மந்திரிகளில் நாற்பத்து ஒன்றுமாக ஆக மொத்தம் 45 மந்திரிமார்கள் வீடுதேடி வந்து விட்டனர். ஜனநாயகம் பேசி அலுத்துப்போன அவர்கள் பணநாயகத்தின் பகட்டைக் காட்டியும் மயங்கிடவில்லை, வாக்காளர் பெருமக்கள். படாடோபத்தைக் கண்டு பயப்படாமல், பதவியின் பெருமையை நினைத்து நடுநடுங்காமல் நெஞ்சத்திலே நேர்மைக்கு இடங் கொடுத்து சுகவாச மஞ்சத்திலே இருந்தது போதுமென்று அனுப்பி வைத்துவிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி சொல்வதோடு ஆணவம் பிடித்த ஆளுங்கட்சியினரைத் தோல்விப் பட்டியலை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்து, காங்கிரஸ் தேய்ந்துவரும்—மந்திரிகளே மங்கிவரும் போக்கினைக் காணவேண்டுகிறோம். மந்திரிகளின் வீழ்ச்சி, எதிர்கால மக்கள் சக்தியின் எழுச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்திருப்பதை மகிழ்வோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திராவிடன்
சந்தாதாரர்களுக்கு

அன்புடையீர் வணக்கம்,

சந்தா நிலுவையுள்ள தோழர்கள் அன்புகூர்ந்துதொகையை உடனே அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

—நிர்வாகி. திராவிடன்

ஆசிரியர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், அச்சிடுபவர், சோமு அச்சகம், 163, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1